

திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி கட்சியின் தேமுதிக வெற்றி வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி கொட்டும் முரசு சின்னத்தில் வாக்கு கேட்டு ஆதரவு திரட்டினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, நகர கழகச் செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி அவர்களை ஆதரித்து நேற்று நொளம்பூர், பாரதி சாலை, மதுரவாயல் வடக்கு பகுதி தேர்தல் பணிமனை அருகில் கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி மேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி மற்றும் கூட்டணி கட்சிகளின் முன்னணியினர், நிர்வாகிகள், மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### எடப்பாடி பழனிசாமி மூடி மறைத்த சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கில்

# 9 போலீசாருக்கு தூக்குத் தண்டனை!

## மதுரை நீதிமன்றம் தீர்ப்பு!

**தூத்துக்குடி, ஏப்.8-**

**தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் (59). வியாபாரி. இவரது மகன் பென்னிக்ஸ் (31). இவர்கள் சாத்தான் குளம் பஜாரில் செல்போன் கடை வைத்திருந்தனர். கடந்த 19.6.2020 அ.தி.மு.க. ஆட்சியில் கொரோனா ஊரடங்கு காலத்தில் இரவில் நீண்ட நேரம் கடையை திறந்ததாக, சாத்தான் குளம் போலீசார் தந்தை, மகன் இருவரையும் காவல்நிலையம் அழைத்துச் சென்றனர். அங்கு போலீசார் தாக்கியதில் இருவரும் இறந்தனர். அப்போது முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி இந்த வழக்கை மூடி மறைக்க முயன்றார்.**



### 9 பேரும் குற்றவாளிகள்!

இது தொடர்பாக சி.பி.ஐ. கொலை வழக்குப்பதிவு செய்து சாத்தான்குளம் இன்ஸ்பெக்டர் எஸ்.ஐ.க்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ். சிறப்பு எஸ்.ஐ. பால்துரை, போலீஸ்காரர்கள் முருகன், முத்துராஜ், சாமத்துரை, செல்லத்துரை, தாமஸ்பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 10 பேரை கைது செய்து, மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இதில், பால்துரை கொரோனாவால் உயிரிழந்தார். இந்த வழக்கில் எஞ்சிய 9 பேர் மீதான விசாரணை மதுரை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்தது.

இந்த வழக்கில் அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஜி.முத்துக்குமரன், கடந்த மார்ச் 23ம் தேதி 9 போலீஸ்காரர்களும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்து தண்டனை விபரம் கடந்த 30ம் தேதி தெரிவிக்கப்படும்' என்றார். இதன்படி கடந்த 30ம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்தபோது ஒன்றிய மற்றும் மாநில அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், கூடுதல் விபரங்கள் தேவை எனக் கூறி மீண்டும் 2ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2ம் தேதி விசாரணையில் சி.பி.ஐ. தரப்பில் ஆஜரான வக்கீல், 'குற்றவாளிகள் 9 பேருக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும். அரிதினும் அரிதான காவல் கொடூர கொலை வழக்குகளில் தூக்கு தண்டனை வழங்கலாம் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது" என்றனர்.

அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, தண்டனை விபரத்தை தெரிவிப்பதாகக் கூறி ஒத்திவைத்திருந்தார். இந்நிலையில் 6.4.2026 காலை வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி முத்துக்குமரன் மாலை 5.30 மணியளவில் தண்டனை விபரத்தை தெரிவிப்பதாகக் கூறி ஒத்தி வைத்தார்.

அதனடிப்படையில், காவல் நிலைய மரணங்கள் சமுதாயத்தில் மிகவும் கொடியது என சாத்தான் குளம் வழக்கில் நீதிபதி முத்துக்குமரன் தீர்ப்பை வாசித்தார்.

"காவல் நிலையத்தில் வைத்து இருவரும் காவல் சித்திரவதை செய்யப்பட்டு சாகடிக்கப்பட்டுள்ளனர். இருவரும் நிராயுதபாணியாக இருந்த போதும், இரவு முழுவதும் காவல் நிலையத்தில் வைத்து தாக்கியுள்ளனர். இருவரும் வியாபாரிகள். சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருப்பவர்கள். அவர்கள் மீது எந்த குற்ற வழக்கும் இல்லை என்றே தெரிகிறது.

### அதிகார துஷ்பிரயோகம்!

குற்றவாளிகளை சார்ந்து குடும்பம் உள்ளது என்பதால் தண்டனையை குறைக்க வேண்டுமென்பதை ஏற்க இயலாது. தண்டனை குற்றத்தின் தன்மையை பொறுத்தே தீர்மானிக்க வேண்டும். குற்றவாளிகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதால், கடுமையான குற்றமாகவே கருத வேண்டும். பொதுமக்கள் பணத்தில் அரசு ஊதியம் பெற்றவர்கள், பொருளாதார அழுத்தத்தையோ, மன அழுத்தத்தையோ காரணமாக கூற இயலாது.

சட்டத்தை காக்க வேண்டியவர்களே குற்ற செயலில் ஈடுபட்டுள்ளார்கள். வேலியே பயிரை மேய்ந்து அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர். தந்தை மகன் இருவர் மீதும் பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்பது நிரூபணம் ஆகியுள்ளது. எங்கு அதிகாரம் உள்ளதோ அங்கு பொறுப்பு அதிகமாக இருக்க வேண்டும். சட்ட திட்டங்களை காற்றில் பறக்கவிட்டு காவல்துறையினர் செயல்பட்டுள்ளனர். இரக்கமின்றி அடித்ததை கொடூரமாகவே பார்க்க வேண்டும்.

ஒரே நேரத்தில் தந்தை மகன் என ஒரு குடும்பத்தின் ஆணிவேர் பிடுங்கப்பட்டுள்ளது. சாதாரண நபர்கள் குற்ற செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு சாதாரண தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய காவல்துறையினரே இதில் குற்ற செயல்களை செய்துள்ளனர்.

காவல் நிலையங்களில் ஏற்படும் மரணங்களில் நேரடி சாட்சிகள் அரிதிலும் அரிதாகத்தான் இருக்கும். அந்த வகையில் இந்த வழக்கில் நேரடி சாட்சியம் உள்ளது. குற்றவாளிகளுக்கு பொருளாதார ரீதியாகவும் கடுமையான தண்டனை வழங்கினால் தான் இது போன்ற குற்றங்கள் நடைபெறுவதை தடுக்க முடியும்.

வழக்கில் கைது செய்யப்பட்ட 9 போலீசாருக்கும் மரண தண்டனை விதிப்பதே சிறந்தது. இது போன்ற வழக்குகளில் ஆயுள் தண்டனை வழங்கினால், இப்படி செயல்படும் போலீசாருக்கு அச்சம் ஏற்படாது" என நீதிபதி தீர்ப்பு வழங்கினார். மேலும் இந்த வழக்கில் ஆய்வாளர் ஸ்ரீதருக்கு மரண தண்டனையுடன் ரூ.84 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

### அனைத்து இயற்கை வளங்களும் அதானிக்கு விற்கப்பட்டுவிடும் என எச்சரிக்கை!

# பேருந்துகளில் அனைவருக்கும் கட்டணமில்லாப் பயணம்!

## புதுச்சேரியில் ராகுல் காந்தி வாக்குறுதி!

*புதுச்சேரி, ஏப். 8-*

*புதுவையில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தால் அனைவருக்கும் பேருந்துகளில் கட்டணமில்லா பயணத் திட்டம் செயல்படுத்தப்படும், அரசு வேலை வாய்ப்புக்கான வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்படும், மாநில அந்தஸ்து பெற்றுத் தரப்படும் என மக்களவை எதிர்க் கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்தத் தலைவருமான ராகுல்காந்தி வாக்குறுதிகள் அளித்து பிரச்சாரம் செய்தார்.*



*புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கடற்கரைச் சாலையில் திங்கள்கிழமை காங்கிரஸ் உள்ளிட்ட மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் ராகுல்காந்தி பேசியதாவது:-*

*தற்போது புதுச்சேரியை ஆள்பவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள் அல்ல. எங்கேயோ இருந்துகொண்டு, புதுச்சேரியை ஆட்சி செய்கின்றனர். இங்கு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் அரசு இல்லை. மாறாக, புதுதில்லியின் கருத்துகளை திணிப்பவர்களின் கீழ் செயல்படும் அரசுதான் உள்ளது. பா.ஜ.க.வின் கொள் கைகள், சித்தாந்தங்களை புதுவையில் புகுத்த நினைக்கின்றனர். துணைநிலை ஆளுநரைக் கொண்டு 'ரிமோட் கன்ட்ரோல்' மூலம் புதுச்சேரி அரசை இயக்கி வருகின்றனர்.*

*புதுச்சேரியில் உயிரோட்டமாக இருந்த தொழில்கள் அனைத்தும் நசிந்து விட்டன. 100க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. பா.ஜ.க. அரசு அதானி அரசாக செயல்படுகிறது. காரைக்கால் துறைமுகம் ஏற்கெனவே விற் கப்பட்டு விட்டது. புதுச்சேரியில் பா.ஜ.க. கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மின்துறை உள்பட அரசுக்குச் சொந்தமான அனைத்து இயற்கை வளங்களும் அதானிக்கு விற்கப்பட்டு விடும் என எச்சரிக்கிறேன்.*

*புதுச்சேரியில் பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பாக நடந்து செல்லமுடியாத அளவுக்கு சட்டம்ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது. அரசு நிர்வாகச்சீர்கேடு மிகுந்து அனைத்துத் துறைகளிலும் ஊழல் நடக்கிறது. ஆகவே, இந்த ஆட்சி தொடரக்கூடாது.*

### ரூ.20 லட்சம் மருத்துவக் காப்பீடு:

*புதுச்சேரியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், மாநிலத்தைச் சேர்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ. 2 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும். பொதுத் துறை மற்றும் தனியார் துறைகள் மூலம் புதிதாக 30 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.*

*புதுச்சேரி மக்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கக் கூடிய வாய்ப்பைப் பெறுவர். அரசு வேலை வாய்ப்புக்கான வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்படும்.*

*அனைத்து குடும்பங்களும் எளிதாக மருத்துவ சிகிச்சை பெறும் வகையில்,*

*ஆண்டுக்கு ரூ.20 லட்சம் மருத்துவக் காப் பீடு வசதி செய்து தரப்படும். எல்லாவற் றுக்கும் மேலாக புதுச்சேரி மக்களின் உணர்வுகளை, எண்ணங்களை பிரதிபலிக் கும் அரசு அமைக்கப்படும்.*

### 6 மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல்:

*இந்த மாநிலத்தை துணைநிலை ஆளுநர் ஆள்வதை காங்கிரஸ் விரும்பவில்லை. புதுச்சேரி மக்களே இந்த மாநிலத்தை ஆளவேண்டும் என்பதுதான் காங்கிரஸின் நிலைப்பாடு. ஆகவேதான், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், 6 மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும். உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டால்தான் அடுத்தத் தலைமுறையினர் அரசு நிர்வாகத்துக்கு வருவார்கள். மேலும் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற்றுத் தருவோம் என்றார் ராகுல் காந்தி.*

### காங்கிரஸ் தேர்தல் அறிக்கை வெளியீடு:

*முன்னதாக புதுச்சேரி மாநிலத்துக்கான தேர்தல் அறிக்கையை ராகுல் காந்தி வெளியிட்டார்.இதனை கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். கூட்டத்தில், காங்கிரஸ் புதுச்சேரி மாநிலத் தலைவரும், எம். பி.யுமான வெ. வைத்திலிங்கம், முன்னாள் முதல்வர் வே. நாராயணசாமி, கர்நாடக அமைச்சர் தினேஷ் குண்டுராவ், காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், முன்னாள் எம்.பி. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.*



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் பகுதி தலைவர் ஏ.கோபி தலைமையில் துறைமுகம் தொகுதி த.வெ.க பகுதி செயலாளர் கே.சிற்றரசு மற்றும் அக்கட்சியைச் சார்ந்த மகாலட்சுமி அருண், அஸ்வின், ரஜித், தீபா ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சியிலிருந்து விலகி திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.அனிதா மற்றும் சி.ராதிகா ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி 144வது வட்டத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, அனைத்து கூட்டணி கட்சி முன்னணியினர், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, வட்ட கழக செயலாளர்கள் எம்.இ.ஸ்டாலின், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.ரூபன், மாவட்ட பிரதிநிதி ம.உதயகுமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), BDAக்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC), வெல்லும் தமிழ்ப் பெண்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.